முருகப்பெருமான் துணை

**மகான் குலசேகர ஆழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.04.2023, வெள்ளிக்கிழமை

1. அன்னதான நெறிமுறை காட்டும்
ஆறுமுக அரங்க மகானே
அண்ணலே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சேல் திங்கள்
2. திங்களிலே அறுநான்குதிகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 24ம் நாள் 07.04.2023, வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு அனுகூல ஆசி
இங்கனமே குலசேகர ஆழ்வாரும்
இயம்பிடுவேன் உலகநலம் காண
3. காணவே சமூக மாற்றம்காண
கட்டாயம் மக்களின் ஒழுக்கம்
ஞானவழி இருத்தல் வேண்டும்
நம்பியே குருமார்க்கம் ஏற்று
4. ஏற்று பின்பற்றும் வண்ணம்
எல்லாமே குருவடிக்கே என
பற்றுவைத்தல் வேண்டும்
பசிபிணி அல்லல் விரட்டும்
5. விரட்டும் மனபலம் வேண்டும்
விடாது ஞானவழியினை
வரட்டும் சித்தி எனக் கருதியே
வல்லமைபட இயங்க வேண்டும்
6. வேண்டாம் மாயை அல்லலென
வேண்டும் தியாக உள்ளமென
தொண்டுவழி தன்னை மாற்றி
தேசிகனின் தொண்டராக மாறவேண்டும்

7. வேண்டி சேவை வழிகளை
விடாது சமூகம்தனில் பரப்பி
தொண்டு புரிந்து தொடர
தேசிகனால் மீட்கப்படுவர்
8. மீட்கப்பட உலக மாற்றமாக
மக்களின் மனநிலை தேற
தட்டாது ஞானபலமாக மாறும்
தவநிலை தருமநிலையாக மாறி
9. மாறியே சன்மார்க்கவழி
மண்ணுலகம் ஆற்றல் பெறும்
ஆறுமுகப் பெருமானை வணங்கும்
அறிவுத் தெளிவு கூடி இனிதே
10. இனிதே தொடர் பூசைகாண
இயன்ற தருமம் செய்துவர
கனிவேலவன் கருணைகிட்டும்
கந்தப் பெருமான் அரங்கன் ஆக
11. ஆகவே நடத்தும் அற்புதம்
அனைத்து சூட்சுமமும் விளங்கி
யுகமே மாற்றம் காணும்
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

—சுபம்—